விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 பங்குனி 10 ஜ. அவ்வல் 26 இதழ் 39
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23—3—82

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட சமரச மாநாட்டில் முடிவு

## கடைகள் இன்று திறக்கப்படும்

## கைதானவர்கள் பிணையில் அனுமதி?

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இரு சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்துநேற்று மாலை யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற சமரச மாநாட்டில் அசம்பாவித சம்பவங்கள் தொடர்ந்து நடைபெருத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். என்று தீர்மானிக்கப்பட்டது.

இச் சமரசமகாநாட்டில் வடபிராந்திய பொலிஸ்மகஅதிபர், யாழ் பொலிஸ் அதிபர், உதவிப் பொலிஸ் அதிபர், யாழ். பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர்,

(8 பக்கம் பார்க்க)

# கான்ஸ்டபிள் 'நாதன்' சுட்டுக்கொலை!

## வட்டுக்கோட்டையில் நேற்றிரவு சம்பவம்

(சித்தன்கேணி)

யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு.மகேஸ்வரநாதன் (39 வயது) நேற்றிரவு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்.

இச்சம்பவம் நேற்றிரவு சுமார் 7-45 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு முன்பாக நிகழ்ந்தது.

'நாதன்' என்று அழைக்கப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. மகேஸ்வரநாதன், முன்னர் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டபோது திரு. மகேஸ்வரநாதன் அங்கு கடமையாற்றினுர். இறந்தவருக்கு ஒரு குழந்தை உண்டு.

### நேற்றிரவு சம்பவம்

பொலிஸ் கான்ஸ்டபிள் நாதன் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக நேற்றிரவு நடைபெற்ற ஸ்தலவிசாரணைகளின்படி, நேற்றிரவு சுமார் ஏழு மணி நாற்பத்தைந்து நிமிடநேரமளவில் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என்று தெரிய வந்தது.

### மூன்று சைக்கிள்கள்

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் நாதன், சைக்கிளில் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதியில் இரத்தவெள்ளத்தில் கிடந்த நாதனுக்கு அருகில் இரண்டு சைக்கிள்கள் காணப்பட்டன. அவருக்கு மேலாக ஒரு சைக்கிள் கிடந்தது.

ஆறு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக முததலில் கிடைக்கப்பெற்ற தகவல்கள்தெரிவித்தன,

### நான்கு பேர் நின்றனராம்

நேற்றிரவு ஸ்தலத்தில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், நேற்றிரவு சுமார் ஏழு மணியளவில் நான்கு நபர்கள், சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் நூறு யார் தூரத்தில் நின்றனர் என்றும், அவர்கள் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களாகக்காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டைச் சேர்ந்த கான்ஸ்டபிள் நாதன் வழக்கம் போல வேலைக்கு யாழ்ப்பாணம் சென்று பஸ்ஸில் வந்து வட்டுக்கோட்டை, இந்துக்கல்லூரிக்கு அருகில் இறங்கி அங்கு வைக்கப்பட்டிருந்த தமது சைக்கிளில் வீட்டுக்குப் புறப்பட்டதாகவும் வீடு செல்லும் வழியில்வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு முன்பாக சுடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு சுமார் ஒன்பது மணியளவில், சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வடபிராந்திய பொலிஸ் மா அதிபர், யாழ் உதவி பொலிஸ் அதிபர், தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர். காங்கேசன்துறை உதவிபொலிஸ்அதிபர் மற்றும் பொலிஸ்கான்ஸ்டபிள்கள்இராணுவத்தினர் வந்தனர். நேற்றிரவு அப்பகுதி முழுவதும் பலத்த தேடுதல் வேட்டைக்குள்ளானது.

## வேலைநீக்கம்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சியில் பொலிசாரால் தடுப்புகாவலில் வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் தப்பியோடியது தொடர்பாக அப்பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பல கொள்ளைசள் சம்பந்தமாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த பரமேஸ்வரன் என்ற கைதி பொலிஸ் காவலிலிருந்து தப்பி ஓடியது தெரிந்ததே.

## ★ கிளிநொச்சித் தொகுதி பிரச்னை:

# தனிமாவட்டப் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது!

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சித் தொகுதி தனி மாவட்டமாக்கப்பட வேண்டுமென்ற பிரேரணை கிளிநொச்சித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச்சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டணிக் கூட்டத்தில் இப் பிரேரணை முன் மொழியப்பட்டபோது கூட்டணித் தலைமைப் பீடத்தினுல் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கூட்டத்திலிருந்து எழுந்து சென்று சிலருடன் அலுவலக அறைக்குள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி. திருதா. திருநாவுக்கரசு ஆகியோர் கூட்டத்திலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தார்கள். யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றி குறிப்பு எழுதிக்கொண்டிருந்தார்.

பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் இக் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவர் அன்றைய தினம் கலந்துகொள்ளவில்லை.

கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு. பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிளிநொச்சித் தொகுதியில் அடங்கும் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய பிரதேசங்களை கிளிநொச்சி மாவட்டமாகப் பிரகடனம்செய்யவேண்டுமென்று பளையைச் சேர்ந்த திரு. ஜோர்ஜினுல் முன்மொழியப்பட, அப் பிரேரணை சபையில் உள்ளோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்குமுன்னர், பொதுச் சபைக் கூட்டங்களுக்கு மாவட்டஅபிவிருத்தி சபைத் தேர்தலுக்குப் பின்னர், தொகுதிக்கிளையின் செயலாளரும், பொருளாளரும் சமூகமளிக்காததினுல் புதியவர்கள் அப் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளராக திரு. க. சிவசாமியும், பொருளாளராக இரா நாகேந்திரமும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

கிளிநொச்சித்தொகுதி மக்களின் தனிமாவட்டக் கோரிக்கை பற்றி ஆராய

(8ம் பக்கம் பார்க்க)

கடன் வழங்குசபைத் தேர்தல்:

# "கூடுதலான வாக்குகளை இ.த.ஆ.சங்கம்பெற்றுள்ளது'

## பிரசார செயலாளர் கருத்து

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள கடன் வழங்கு சபைத் தேர்தலில், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்கடந்தவருடத் தேர்தலிலும்பார்க்க கூடுதலான வாக்குகள் இம்முறை பெற்றிருப்பது, குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்'' என்று இச்சங்கத்தின் யாழ். மாவட்ட பிரசார செயலாளர் திரு.ந.சிவபாதம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம்அறிவிக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க' இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எல்லா ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

'' இ. த. ஆசிரியர் சங்கம் கடந்த ஆறு வருடங்களாக இத்தேர்தலில் போட்டியிட்டு கூடுதலான ஆசனங்களைத் தொடர்ந்து கைப்பற்றிவருகிறது. கடந்த வருடத் தேர்தலில், முதலிடம்பெற்ற அபேட்சகருக்கு ஆகக்கூடுதலாக சுமார்ஆயிரத்துஅறுநூறு வாக்குகளே கிடைத்தது. இவ் வருடம் முதலிடம் பெற்ற அபேட்சகர் இரண்டாயிரத்துக்

(8ம் பக்கம் பார்க்க)

சிங்கப்பூர் எதிர்க்கட்சி அங்கத்தவர்

# ஜெயரத்தினம் மீது குற்றச்சாட்டு: நிரூபிக்கப்பட்டால் எம்.பி. பதவி இழப்பார்!

சிங்கப்பூர். மார்ச், 22

பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறியதாக சிங்கப்பூர் பாராளுமன்றத்தின் ஒரேயொரு எதிர்க்கட்சி அங்கத்தவரான திரு. ஜெயரத்தினம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இவர் இன்று விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளதாகவும்' கூறப்பட்டது.

இவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் பாராளுமன்ற அங்கத்துவத்தை இழக்க வேண்டிவருமென்றும்தெரிவிக்கப்பட்டது.

திரு.ஜெயரத்தினத்தின்மீது இக்குற்றச்சாட்டை சிங்கப்பூர் ராஜாங்க அமைச்சர் திரு. சண்முகம் ஜெயக்குமாரே சுமத்தியுள்ளாரென்றும் அறிவிக்கப்பட்டது.

சிங்கப்பூர் பாராளுமன்றத்தின் 75 அங்கத்தவர்களில் 74 பேர் ஆளும் மக்கள்கட்சியைச் சேர்ந்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

## காணவில்லை

சுருவிலைப் பிறப்பிடமாகக் சொண்டவரும் நாரந்தனை வாசியுமான பூவரசங்குளம் சிவசங்கரி அரிசி ஆலைப் பொறுப்பாளர் திரு. சூசைப்பிள்ளை மனுவேற்பிள்ளை அருளப்பு அவர்களைச் சில தினங்களாகக் காணவில்லை. இவர் கடைசியாக 10—3—82ம் திகதி காலை நாரந்தனையிலிருந்து வவனியா சென்றிருந்தார். வயது 65, உயரம் 5 அடி, நரைத்ததலை, பொதுநிறமுடையவர். இவரைப்பற்றிய தகவல்கள் தெரிந்தோர் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ, அல்லது நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலய பங்குத்தந்தைக்கோ [தொலை பேசி: 538, நாரந்தனை உப தபாலகம்] தகவல் கொடுத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திருமதி அருளப்பு

நாரந்தனைமத்தி.

2629

### மணிவாக்கு

அஞ்சினர்க்கு சதமரணம்
அஞ்சாத நெஞ்சுடையோருக்கு ஒரு மரணம்.
—ஷேக்ஸ்பியர்

# நமது நோக்கு

## நல்ல முடிவு

நைஜீரியாவில் தொழில் புரிய இலங்கையருக்கு இருந்த தடை நீக்கப்பட்டது ஒரு பெரு மகிழ்ச்சியான செய்தி.

பல வருடங்களாக இலங்கையிலிருந்து பெருந்தொகையான ஆசிரியர்களும், பொறியியலாளர்கள், மற்றும் தொழிற்பயிற்சி பெற்றவர்களும்கூடுதலான சம்பளத்தில் நைஜீரியா சென்று வேலை பார்க்கும் வசதிகள் இருந்துவந்தன.

இடைநடுவில் இலங்கை அரசு நைஜீரியக் குழுக்களுக்கு இங்கு வர விசா வழங்க மறுத்திருந்தது. உண்மையில்காரணமென்னவென்பது இன்றும் மர்மமாகவே இருந்து வருகிறது,

இங்கு நைஜீரியநாட்டுக்கு ஆதரகம்இல்லாதகாரணத்தால் வேலைதேடும்இலங்கையர் டில்லிக்கு செல்ல வேண்டியிருந்தது. அந்தச் சலுகையும் நிராகரிக்கப்பட்டநிலையில் இங்குஇளைப்பாறியிருந்த பல உயர் உத்தியோகத்தர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இருந்தனர்.

நைஜீரியாவைப் பொறுத்தளவில், இலங்கையர்களுக்கு அங்கு பெருமதிப்பு இருந்துவருகிறது.

இங்கு ஏற்பட்ட தடை காரணமாக, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய இடங்களில் தேவையான ஆட்களைத் திரட்டும் நிர்ப்பந்தம் உண்டானது,

இருபக்கத்தாருக்கும் நன்மையளிக்காதஇத்தடைபற்றி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு சம்பந்தப்பட்ட பகுதியினர் மகஜர் அனுப்பியும் முறைப்பாடு செய்தும் வந்தனர்.

நியாயம் விளங்கிய நிலையில் ஜனாதிபதி அவர்கள் இத்தடையை நீக்கியது இன்றைய பொருளாதார நெருக்கடிநிலையில் பெரிதும் வரவேற்கத்தக்க முடிவாகும்.

குறிப்பாக இலங்கையிலிருந்து பல தமிழ் பட்டதாரி ஆசிரியர்கள் அங்கு நல்ல பதவிகளில் பணியாற்றுகின்றனர். அந்த நாட்டின் ஆட்சியாளரின் பெருநம்பிக்கையையும் மதிப்பையும் பெற்றிருக்கின்றனர்; அந்த வகையில் இன்று மறுபடியும் இத்தடை நீக்கத்தால் இன்னும் பலபேர்களுக்கு வேலைபெறும்வசதிகள் கிடைத்திருப்பது மனமுடைந்து கவலைப்பட்டிருந்த பலருக்கு ஆறுதலளிக்கும்.

இங்கிருந்து வெளியேறும் திறமைசாலிகள் பிரச்னை வேறு; குறிப்பாக நைஜீரியாவுக்கு ஏற்பட்ட தடை வேறு.

நியாயமற்ற இத்தடையை நீக்கியதற்குநாம் அரசையும் குறிப்பாக ஜனாதிபதியையும் பாராட்டுகின்றோம்,

தெய்வம் விடை கொடுத்தும் பூஜாரி தயங்குவதை தடை செய்யப்பட வேண்டும்.

## கோளென் செயும்?

தமிழ் மக்களின் தலைவிதி அவர்களிலேயேதங்கியிருக்கிறதென்று வற்புறுத்தியிருக்கிறுர் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா.

அண்மையில்நடைபெற்ற விஞ்ஞான தொழில்நுட்ப பொருட்காட்சியொன்றைத் திறந்து வைத்துப் பேசியபோது இந்த உண்மையை நினைவூட்டியது பொருத்தமானது.

ஆயினும் இது ஒரு பெரிய கண்டுபிடிப்பா என்று ஏளனம் செய்வோரும் இருக்கத்தான் செய்வார்கள். தீதும் நன்றும் பிறர் தரவாராவென்பது சங்ககாலத்து உண்மையென்றும் அக்கிண்டல் நீண்டுபோக இடமுண்டு.

நாம் குறிப்பிடும் திருத்தம் தமிழ்மக்கள் மட்டுமல்ல எல்லாமக்களும் தங்கள் உயர்ச்சியைத் தாங்களே உழைப்பாற்தேடிக் கொள்ளவேண்டும் மென்பதே.

இதற்கவசியமான மனத்திட்பத்தை இன்று உலகளாவிய நிலையில்கெடுத்து வருவது சோதிடவிவகாரங்கள்.

பலகோள்கள் சேர்ந்தமையால்பூகம்பம், பூமிஅதிர்ச்சி பயங்கரவிபத்து போன்றடல பேரழிவுகள் வரப்போகிறதாக அண்மையில் பல சோதிடர்கள் அறிக்கை விடுத்திருந்தனர்.

நாமும் குறிப்பிட்ட அபாயகரமான நாளை பாதுகாப்பாகக் கழித்தோம். பேணுவே நடுங்கத்தொடங்கிற்று. ஆனுல் நாம் மட்டுமல்ல அகில உலகமுமே தப்பிவிட்டது.

எமக்கு எம்மிலேயே அவநம்பிக்கை ஏற்படவும் எமக்கு வரும் நன்மை தீமைகள் யாவும் எங்கள் விவேகத்தாலோவிவேகமின்மையாலோ அல்ல கிரகங்களினுலேயே என்று கருதும் பகுத்தறிவற்ற போக்கு குறிப்பாகத் தமிழர்களைப் பீடித்துவருவது பரிதாபத்துக்குரியது.

''நாளென் செயும் வினைதான் என் செயும்?''

### திருத்தம்

நேற்று வெளியான ''ஈழநாடு'' இதழில் ஆசிரிய தலையங்கத்தில் இரண்டாவது கலத்தில் ''இன்று ஊழலை......'' என்று தொடங்கும் ஆருவது பந்தியின் எட்டாவது வரியில் ''......... விசாரணை நடத்திப் பகிரங்கமான தண்டனை வழங்கப்பட்டிருக்கிறதா......'' என்பதற்குப் பதிலாக ''விசாரணை நடத்திப் பகிரங்க மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கிறதா?......,' என்று இடம்பெற்று விட்டது. இந்த அச்சுப் பிசாசுக்காக வருந்துகின்றேம், (ஆர்)

''தமிழ் மக்களின்

# அபிலாஷைகளில்ஒன்றேனும் அரசு நிறைவேற்றவில்லை''

## போக்குவரத்து அமைச்சரிடம் அபிவிருத்திசபைத் தலைவர் கவலை

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களின் அபிலாஷைகளில் ஒன்றையேனும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்று யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. நடராசா கவலை தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். மொமட்டுக்கு, யாழ். செயலகத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு மகாநாட்டில் திரு. சு. நடராசா தலைவை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட எம்.பி.க்களில் திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், வெ. யோகேஸ்வரன், எம். ஆலாலசுந்தரம், வி. ஆனந்தசங்கரி, வி. தர்மலிங்கம், கே. இராசலிங்கம், ஆகியோரும் யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள் யாழ். செயலக மேலதிக, உதவி அரசாங்க அதிபர்கள் 5 ற்றும் அதிகாரிகள் இ. போ. ச. அதிகாரிகள் ஆகியோரும் இம்மகா நாட்டில் கலந்து கொண்டனர்.

திரு. நடராசா தமது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது; 1977 ல் நடைபெற்ற தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் அமோக ஆதரவு பெற்று வெற்றியீட்டினர். ஆனுல் அரசாங்கம் தமிழ்மக்களின் கோரிக்கைகளில் எதனையும் இதுவரை நிறைவேற்றவில்லை. தமிழ் மக்களின் பிரச்னைகள் தீராதவரை இந்நாட்டில் சமாதானம் ஏற்படவும் முடியாது. சிறுபான்மை மக்களின் பிரதிநிதியாக இருக்கும் அமைச்சரும் இது விஷயத்தில் தலையிட்டு ஒரு முடிவு காண்பதற்கு ஒரு நல்லெண்ணத்தூதுவராகச் செயல்பட வேண்டும்.

### போக்குவரத்துச் சேவைகள்

போக்குவரத்துச் சேவைகள் குறித்து அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. நடராசா பேசுகையில் இ. போ. ச. பஸ்களும் தனியர் பஸ்களும் ஒரே நேரத்தில் ஒரே பாதையில் ஓடுவதால் போக்குவரத்துச் சபைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதற்கென ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டும் தனியார் பஸ் சேவை இல்லாதிருந்தகாலத்திலும் போக்குவரத்துச்சபை நஷ்டத்தில் தான் இயங்கியது. சபை அதிக லாபம் பெறுவதையே நாங்கள் விரும்புகின்றேம். அதற்குப் பரிகாரம் காணப்பட வேண்டும் என்றுர்.

பாடசாலைப்பிள்ளைகள் உய நேரத்துக்குப் பிரயாணம் செய்யமுடியா மலிருக்கிறுர்கள் என்றும் இது விஷயத்தில் அமைச்சர் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கோண்டார்.

''மல்லாகத்தில் இ.போ.ச. பஸ்கள் திருத்தம் செய்வதற்கென ஒருகட்டிடம் கட்டப்பட்டும் இதுவரை காலமும் அக்கட்டிடம் பயன்படுத்தப் படாமல் இருக்கிறது என்று குறிப்பிட்ட திரு. நடராசா கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையே நடைபெறும் தனியார் பஸ்சேயைால் பிரயாணிகள் சௌகரியமாகப் பிரயாணம் செய்யக்கூடியதாக இருக்கிறது என்றும், ஆனுல் கொழும்பில் தனியார் பஸ்கள் ஓரிடத்தில் தங்கி நிற்கவசதியில்லாதிருப்பதாகவும், இதற்கென ஓரிடத்தை அங்கு விரைவில் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

### நேர்மையற்ற பதவி உயர்வுகள்

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்ததம் பேசுகையில்

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அதிகாரங்கள் பரவலாக்குவது குறித்து வாக்குறுதி அளித்திருந்தும் போக்குவரத்துச்சபைக்கு மாத்திரமே அதிகாரம் பரவலாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இ. போ. சபையில் தகுதி அடிப்படையிலில்லாமல் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதால் ஊழியர்கள் விரக்தி அடைந்துள்ளார்கள் என்றும், உயர் கல்வி கற்றசிலர் இன்றும் கண்டக்டர்களாகவே இருக்கும் பொழுது, அதற்குக் குறைந்த தராதரமுடையவர்கள் பதவி உயர்வு பெற்றிருக்கிறுர்கள் என்றும், இப்பதவி உயர்வுகள் என்ன அடிப்படையில் நடைபெற்றதென்றும் திரு ஆலாலசுந்தரம் கேள்வி எழுப்பினுர்

தொழிற்சங்கங்கள் சிலரின் நன்மைக்காக இயங்கக்கூடாது என்று வற்புறுத்திய அவர் அரசியல் இடமாற்றங்கள் நடைபெற்றுவருவதை நிறுத்தி வைக்கும்படியும் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. ந. இராஜேந்திரம் பேசுகையில்

மாவட்ட அபிவிருந்திசபை உறுப்பினர்சள் 162 பேரும் மாவட்ட ரீதியில் அத்தியாவசியமான கருமங்களில் ஈடுபட வேண்டியிருப்பதால், புகையிரதம், இ. போ. ச. பஸ்களில் இலவசமாகப்பிரயாணம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுவேண்டுகோள் விடுத்தார்,

புகையிரதத் தொழிலாளர் சங்கம் கேட்டுக்கொண்ட கோரிக்கைகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும், இ. போ ச. சேவை பரவலாக்கியது போல் புகையிரத-சேவையும் பரவலாக்கப்பட வேண்டுமென்றும் திரு. இராசேந்திரம்கேட்டுக்கொண்டார்.

அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. க சின்னத்துரை உட்படப் பலரும் இ. போ. ச. போக்குவரத்துச்சேவை குறித்து கண்டித்துப் பேசினர்.

அமைச்சர் அல்ஹாஜ்முகம்மது பதிலளித்துப் பேசுகையில், 'மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளைத் தாம் நிறைவேற்றிவைப்பதாக உறுதியளித்தார்., (மா)

தென்கிழக்காசியாவில்

## முழுமையான இராணுவத் தளம்: அமெரிக்காதிட்டம்?

(மணிலா)

கடந்த வாரம் தென்கிழக்காசியாவிலிருந்து இரண்டு செய்திகள் ஏககாலத்தில் வெளியாகியிருந்தன. ஒன்று அமெரிக்கக் கடற்படையின் பசுபிக்பிராந்திய தளபதி அட்மிரல் ஜே. வட்கின்ஸ் தாய்லாந்துக்கு மேற்கொண்டவிஜயம் அடுத்தது, இலங்கையின் கிழக்குக் கரையோரத்திலுள்ள திருகோணமலைத் துறைமுகத்தின்மீது அமெரிக்கா நாட்டங் கொள்ளவில்லை என்ற செய்தி ஆனுல் உண்மையில் முன்னையதில் மட்டுமல்ல, பின்னையதிலும் அமெரிக்கா பேரார்வம் கொண்டுள்ளது.

மேற்குப் பசுபிக்கில் உள்ள அமெரிக்காவின் 7வது கடற்படையின் தளங்களுக்கும இந்துசமுத்திரத்தில் உள்ள தளங்களுக்குமிடையிலான பாதையைக் கொண்டுள்ளபிரதான பகுதியில், இந்த இரண்டும் இருப்பதுதான் அமெரிக்கா இவற்றின்மீது ஆர்வம் கொண்டிருப்பதற்குக் காரணமாகும்.

தென்கிழககாசியாவிலும் அதன் அண்டைப் பிராந்தியங்களிலும், யுத்தக்கப்பல்களுக்கும், போர் விமானங்களுக்கும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களையும் ராணுவத்தளபாடங்களையும் சேகரிக்கும் அல்லது முடியுமானுல்முழுமையான இராணுவத் தளங்களைப்பெற அமெரிக்கா முயற்சித்துவருகிறது.

பசுபிக்கிலிருந்து தியாகோகார்சியா வரையுள்ள சங்கிலி போன்ற தளங்களையும், ஓமானில் உள்ள தளம்' மற்றும் நெகவ் பாலைவனத்தில் உள்ள இஸ்ரேலிய தளங்களையும், அமெரிக்காவுக்கு அவசரமேற்படும்போது மத்தியதரைக் கடலிலுள்ள தென்பகுதி அணிக்கும் பயன்படுத்த வேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறச என்று வாஷிங்டன் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கன்றன. இதன் மூலம் முப்படை மூலமாக ஆசியாக் கண்டத்தைச் சுற்றிவளைப்பதே அமெரிக்காவின் நோக்கம் என்று இப்பத்திரிகைகள் கூறுகின்றன.

பலநாடுகளின் துறைமுகங்களிலும் விமானத்தளங்களிலும் நிரந்தரமாகத்தங்கியிருப்பதற்காக அமெரிக்க ராணுவம் முனைந்து வருகிறது. இதையேதான் அட்மிரல் வட்கின்ஸின் தாய்லாந்து விஜயம்

(7ம் பக்கம் பார்க்க)

## வீரபத்திரர் ஆலய கும்பாபிஷேகம்

[மாவிட்டபுரம்]

மல்லாகம் வீரபத்திரர் ஆலய மகாகும்பாபிஷேக விழா இம்மாதம் 31—ம் திகதி விமரிசையாக நடைபெறஉள்ளது.

பழுதடைந்து கிடந்த இவ்வாலயத்தை பலஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்து இக்கும்பாபிஷேக விழாவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதிஷ்டாகுரு சிவஸ்ரீ சி. சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் பல குருமார் இதனை நடத்தி வைப்பார். ஆலய திருப்பணிச்சபைத் தலைவரும் தர்மகர்த்தாவுமான திரு. மு. க. தவராஜா இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

### ★ தென்ஆபிரிக்காவில் அரசியல் காரணங்களுக்காக

# சிறைவைக்கப்பட்டவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்க!

## 39 நாடுகள் கோரிக்கை

லண்டன், மார்ச். 22

''தென்னாபிரிக்காவில் அரசியல்காரணங்களுக்காக சிறைவைக்கப்பட்டவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்''.

இவ்வாறு கோரும் மகஜரொன்றில் 39 நாடுகளைச் சேர்ந்த 1400 மாநகரமுதல்வர்கள் கையெழுத்திட்டு, அதனை ஐ. நா. சபையின் இன ஒதுக்கல் எதிர்ப்புகமிட்டிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இம் மகஜரில் நியூயோர்க், லண்டன், ரோமாபுரி, பாரிஸ், மாஸ்கோ ஆகிய நகரங்களின் மாநகரமுதல்வர்களும் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வெ)

## பாக் புதிய அமைச்சர்

கராச்சி மார்ச் 22

பாகிஸ்தானின் புதிய வெளியுறவு அமைச்சராக ஜனுப் யாப்புகான் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் வெளியுறவு அமைச்சர் சுகவீன முற்றதைத் தொடர்ந்து இப்புதிய அமைச்சர் நியமிக்கப்பட்டார்.

## வைகுந்தவாசனுக்கு த. கா. நன்றி

(யாழ்ப்பாணம்)

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை தலைமை அலுவலகத்தின் முன் தமிழ்ஈழ பிரகடனம் செய்த சுதந்திர தமிழ் ஈழ இலக்க தலைவர்களுக்கு தமிழ் காங்கிரஸ் நன்றி தெரிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை எடுத்த திரு. கிருஷ்ணவைகுந்தவாசனுக்கும் நன்றி தெரிவித்து தமிழ்காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழ்காங்கிரஸ் செயற்குழு கூட்டம் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற போது மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது. (ம)

## புங்குடுதீவில் விசர்நாய் ஒழிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் உள்ள விசர்நாய்களையும் நோயுற்ற நாய்களையும் ஒழிப்பதற்கு சுகாதாரப்பகுதியினர் முன்வந்துள்ளனர்.

இவ்வேலை நேற்று ஆரம்பமாகியுள்ளது. அதோடு விசர் தடுப்பூசி போடுவதற்கும் முப்பதிற்கு மேற்பட்ட இடங்களில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. புங்குடுதீவு சுகாதாரப் பரிசோதகர் திரு. க. தங்கவேலாயுதம் இந்த ஏற்பாடுகளை செய்துள்ளார். [அ]

## பாராளுமன்றம் 29-ல் கலைக்கப்படும்

கோலாலம்பூர், மார்ச். 22

மலேஷியாவில் அடுத்த மாதம் பொதுத்தேர்தல்நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மலேஷியா பாராளுமன்றம் இம்மாதம் 29ம் திகதிகலைக்கப்படுமென பிரதமமந்திரி டாக்டர் முகம்மது தெரிவித்தார். (வெ)

## இராணுவ நீதிமன்றம் விசாரணை செய்யும்

இஸ்லாமாபாத், மார்ச். 22

பாகிஸ்தானில், கொலை, சதிவேலை, நாசகாரச்செயல், பயங்கரவாதம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை இராணுவ நீதிமன்றமே விசாரிக்கவேண்டுமென அந்நாட்டின் ஜனாதிபதி ஜனுப் ஷியாவுல் ஹக் பணித்துள்ளார்.

இதற்கேற்ற வகையில் குற்றவியல் சட்டகோவையில் திருத்தங்களை மேற்கொள்ளும்படி அவர் சட்ட அமைச்சரை கேட்டுள்ளார். (வெ)

## பிரதமர் காந்திக்கு லண்டனில் உற்சாகமான வரவேற்பு

லண்டன் மார்ச் 22

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி, 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு லண்டன் வந்து சேர்ந்தபோது உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் திருமதி மாகிரட் தட்சரும் மற்றும் இங்குள்ள பாரதப்பிரமுகர்களும் வரவேற்றனர் சகல இனத்தையும் சேர்ந்த 5குழந்தைகள் பாரத முறைப்படி பிரதமர் இந்திரா காந்தியை வரவேற்றனர்.

ரோயல் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பாரத விழாவில் பாரதபிரதமர் திருமதி இந்திராகாந்தி கலந்து கொள்வார். (க)

## அமெரிக்காமீது ஆக்கிரமிப்பு குற்றச்சாட்டு

லண்டன், மார்ச். 22

அமெரிக்கா தமது நாட்டை ஆக்கிரமித்து வருவதாக நிக்கராகுவாவின் இடதுசாரி அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து கியூபா ஜனாதிபதியும், அணிசேரா இயக்கத் தலைவருமான திரு. பிடல் காஸ்ட்ரோவுக்கும், ஐ. நா. பாதுகாப்பு சபைக்கும் நிக்கராகுவா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நிக்கராகுவாவின் இக்குற்றச்சாட்டு பற்றி இன்று அல்லது நாளை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்படலாமெனவும்தெரிவிக்கப்பட்டது. (வெ)

## பத்திரிகையாளர்களை விடுவிக்கக் கோரிக்கை

லண்டன் மார்ச் 22,

பலநாடுகளிலும் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் சமார் 600 பத்திரிகையாளர்களையும் எழுத்தாளர்களையும் விடுதலைசெய்யுமாறு உலகபத்திரிகையாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

50 நாடுகளைச் சேர்ந்த சுமார் 9000 பத்திரிகையாளர் லண்டனில் கூடியபோது மேற்கண்ட வேண்டுகோள் விடப்பட்டது. போலந்தில் சிறைவைக்கப்பட்டுள்ள 100 பத்திரிகையாளர்களையும் விடுதலை செய்யுமாம் கோரப்பட்டுள்யது.

மத்திய அமெரிக்காவில் வெளிநாட்டவர் தலையீட்டைக் கண்டித்துள்ளனர்வியட்னாமில் நீண்டகாலம் சிறைவைக்கப்பட்டுள்ள எழுத்தாளரையும் கலைஞர்களையும் விடுதலைசெய்யுமாறும் வேண்டுகோள் விடப்பட்டது. [க]

### பாதுகாவல் உத்தியோகத்தர் அட்டகாசம்:

## சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வில்லையாம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை பாதுகாவல் உத்தியோகத்தர்கள் தொழிற்சாலைக்கருகிலுள்ள வீடொன்றினுள் புகுந்து நடத்திய அட்டகாசம் குறித்து யாழ். எம். பிக்கும், யாழ். அரச அதிபருக்கும் முறையிடப்பட்டுள்ளது.

மேற்படி பாதுகாவல் உத்தியோகத்சர்கள் தொழிற்சாலைக்கு முன்பாக நின்று தமக்குள் தகராறுபட்டுக்கொண்டு பின்னர் ஓடிய ஒருவரை துரத்திச் சென்று வி. ஏ. பொன்னுத்துரை என்பவரது வீட்டினுள் புகுந்து வீட்டிலிருந்தவர்களை தாக்கியதாகவும், துப்பாக்கியை காட்டிப் பயமுறுத்தியதாகவும் கூறப்படும் சம்பவம் குறித்து காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டது.

ஆனாலும் இதுவரை இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதனையடுத்தே மேற்படி வீட்டுக்காரர் இதுபற்றி யாழ். எம். பிக்கும் யாழ். அரச அதிபருக்கும் முறையிட்டுள்ளார்.

இதுகுறித்து பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

### கன்னியா குமரிப்பகுதியில்

# 300 வெடிமருந்துக் கடைகள் 'சீல்' வைக்கப்பட்டன!

திருநெல்வேலி, மார்ச். 22

கன்னியாகுமரிப் பகுதியில் உள்ள 300 வெடிமருந்துகடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரானிஸ் தெரிவித்தார்.

ஆயுதங்கள் பாவிப்பதற்கு அனுமதி பெற்றோரில் 400பேர் ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைத்துள்ளதாகவும், 1000 பேருக்கு ஆயுதலைசென்ஸ் இருப்பதாகவும் அவர்தெரிவித்தார்.

கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியிலுள்ள 83 சாராய, மது விற்பனை, கடைகளை இம்மாத இறுதிக்குள் மூடிவிடுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

மீனவ கிராமங்களில் நடமாடும் வைத்தியநிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டு, காயமடைந்தவர்களுக்கு உடனுக்குடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் சகலமதத் தலைவர்களையும் கொண்ட ஊர்வலமொன்று ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்தஅமைதி ஊர்வலம் மண்டைக்காடுஉட்பட கன்னியாகுமரி பகுதியில் உள்ள 20 கிராமங்களுக்கு ஊடாக செல்லும். (க)

# "செய்முறைக் கண்காட்சிகள் மாணவரின்ஆற்றலைவெளிக்காட்டுகிறது'

### -- வடமாநில கல்விப்பணிப்பாளர்

[பண்டத்தரிப்பு]

''கல்வித்துறையில் பல சாதனைகளை நிகழ்த்தி தனித்துவம் வாய்ந்த நிறுவனமாகத் திகழும் யாழ்ப்பாணக் கல்லூரி சமூக சேவையிலும், அபிவிருத்தித்துறையிலும் பெரும் அக்கறை செலுத்திவருவது பாராட்டுக்குரியதாகும். தொழிற்கல்விக்கும், தொழில்நுட்பக் கல்விக்கும் இக்கல்லூரியில் முக்கிய இடமளிக்கப்பட்டிருப்பது எமது யாழ் மாவட்டத்து மாணவ சமுதாயத்திற்கு வரப்பிரசாதமாக அமையுமென்பதில்ஐயமில்லை''

இவ்வாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு, க. சிவநாதன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற வளர்ச்சிகாண் தொழில்நுட்ப, கைத்தொழில் விவசாயக் கண்காட்சியின் நான்காவது தினக் கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கதிர்காமர் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. கே. குணரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

வடமாநிலக் கல்வியதிபதி திரு. க. சிவநாதன் குத்துவிளக்கேற்றிக் கண்காட்சியைத் திறந்துவைத்துத் தொடர்ந்து கூறியதாவது:

''மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொண்டு வருவதற்கு இதுபோன்ற செய்முறைக் கண்காட்சிகள் மிகவும் அத்தியாவசியமானதாகும். தொழில்நுட்பக் கல்விக்கு முக்கிய இடம்கொடுக்கவேண்டும் என்பதே அரசின் விருப்பமுமாகும். இக்கல்லூரியில்

(6ம் பக்கம் பார்க்க)

# வட்டு. லயன்ஸின் செயல் திட்டங்கள்

[பண்டத்தரிப்பு]

''எமது நாட்டில் உள்ள லயன்ஸ் கழகங்கள் சமூக நலத் திட்டங்களில் பங்கேற்று. மனிதகுல நல்வாழ்வுக்காக பல்வேறு பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக இளைஞர் சமுதாயத்தின் எதிர்கால நல்வாழ்வுக்காக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் மேற்கொண்டுவரும் செயல் திட்டங்கள் ஏனைய கழகங்களுக்கு முன்மாதிரியாக இருக்கின்றன''

## மாவட்ட ஆளுநர் பாராட்டு

இவ்வாறு லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் திரு. சுனில் வட்டவெல வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்திய வளர்ச்சிகாண் தொழில்நுட்ப, கைத்தொழில் விவசாய கண்காட்சியின்இறுதி நாள் கண்காட்சியில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கண்காட்சியை திறந்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. சுனில் வட்டவெல தம்பதிகளும் அவரது குழுவினரும் வட்டுக்கோட்டை சந்தியிலிருந்து மேளவாத்தியங்கள் சகிதம் வரவேற்கப்பட்டு மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கதிர்காமர் வரவேற்புரை நிகழ்த்தினர். வைபவத்திற்கு தலைமை வகித்த வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தலைவர் திரு. கே. குணரத்தினம் தமது உரையில் குறிப்பிட்டதாவது;—

''இன்று இறுதி தினமாக நடக்கும் இக் கண்காட்சியை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கிய சகலருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது கழக சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன். அரசாங்க, கூட்டுத்தாபனங்கள், இலங்கைவங்கி, மக்கள் வங்கி, கைதடி நவீல்ட் பாடசாலை ஆகிய பல நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் இக் கண்காட்சியில் காட்சிசாலைகளை அமைத்து ஒத்துழைப்பு வழங்கியமைக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றேன். எமது பொது நலப்பணிகளுக்கும் பேராதரவு நல்கி வரும் பொதுமக்களுக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றேன்.''

## ரூ. 1000 பரிசு

புதுடில்லி மார்ச். 22

பாரத விமான சேவைப் பொன் விழாவையொட்டி சிறப்பான அணிவகுப்பு பண்ணிசைக்கு 1000 ரூபா கொண்ட விருது வழங்கப்படவிருக்கிறது. (கு)


இலாபகரமான முதலீட்டிற்கு ஆரம்பப்படி காங்கேசன்துறையில் அமையவிருக்கும் துறைமுகப்பாலம். லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் 100.5 கோடி ரூபா பெறுமதியான தொழிற் தொகுதியின் ஒரு முக்கியமான பகுதியாகும்.

துரிதமாக பெருமளவு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதால் சிமெந்தின் தேவையும் பெருமளவு அதிகரித்துள்ளது. இதனை அறிந்த இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் உள்ளூர் தேவைகளுக்கும் அதேவேளை ஏற்றுமதி செய்யவும் வசதியாக லங்கா சிமெந்து லிமிட்டெட்டை ஆரம்பித்துள்ளது.

பூர்த்தியாகும் நிலையிலுள்ள முற்றிலும் தன்னியக்க முறையிலமைந்த தொழிற்சாலை, இந்த ஆண்டு 1 ஆவது கட்டம் முடிவடைந்ததும் 500,000 தொன் சிமெந்தை உற்பத்தி செய்யும். 1983 ஜூன் மாதத்தில், 2 வது கட்டம் முடிவடைந்ததும் வருடாந்தம் இரண்டு மடங்கு அதாவது 10 லட்சம் தொன் உற்பத்தி செய்யப்படும்.

5.2 கோடி ரூபா செலவில் முற்றிலும் நவீனமயமாக்கப்படும் காங்கேசன்துறையிலுள்ள துறைமுகப்பாலம், களிக்கல், நிலக்கரி போன்ற முக்கியமான மூலப் பொருள்களை இறக்குமதி செய்ய வசதியளிப்பதுடன் ஏற்றுமதியைத் துரிதப்படுத்தவும் உதவும்.

இலாபம் தரும் இந்த முயற்சியில் நீங்களும் சேருங்கள். ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன, பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா. முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு.

முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருடத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்தவீத வரி மதிப்பு
- வரிவிடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982, ஏப்ரல் 30 வரை

முதலீடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி,
411. காலி வீதி, கொழும்பு - 3

லங்கா சிமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகைமீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ..............விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பிவைக்கவும்.

பெயர்: ..............................................
முகவரி: ..............................................
..............................................

லங்கா சிமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

லங்கா சீமெந்து லிமிட்டெட்

அல்மனார் கட்டிடம்,
302, காலி வீதி, கொழும்பு - 4
தொலைபேசி: 589126

லங்கா சிமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்



Phoenix

இலாபத்தின் ஏணிப்படி

## தவக்கால நற்சிந்தனை



சிலர் தாங்களும் சமாதானத்தில் நிலைத்திருக்கின்றார்கள், மற்றவர்களோடும் சமாதானமாய்ச் சீவித்துவருகிறார்கள். வேறு சிலரோ தாங்களும் சமாதானத்தில் இருப்பதில்லை. மற்றவர்களையும் சமாதானத்தில் விடுவதில்லை. மற்றவர்களுக்குத் துன்பமாய் இருப்பதோடுகூட, தங்களுக்குத்தானே எப்போதும் அதிக துன்பமாகவுமிருக்கிறார்கள். தாங்களும் சமாதானத்தில் நிலைத்திருந்து மற்றவர்களையும் சமாதானத்திற்குக் கொண்டுவரப் பிரையாசப்படுகிறவர்களுஞ் சிலர் உளர். மேலும் இந்த நிற்பாத்சியமான சீவியத்தில், நமதுமுழுசமாதானம் எதில் அடங்கியிருக்கிறதென்றால், இடையூறுகளை உணராமலிருப்பதிலல்ல, அவைகளைத் தாழ்ச்சியோடு சகிப்பதில்தான் அடங்கியிருக்கிறது. நன்றாய்ச் சகிக்கத்தெரிந்தவன் அதிக சமாதானமுள்ளவனாய் இருப்பான். அவனே தன்னை வென்றவன். உலக எசமான் கிறீஸ்துவுடையசினேகிதனும், பரலோக சுதந்திரவாளியும் அவனே.

(கிறிஸ்துநாதர் அனுசாரம்)

## அத்துமீறிக் குடியேறியவர்: வெளியேறுமாறு உத்தரவு

(மாவிட்டபுரம்)

வீடொன்றினுள் அத்துமீறிக் குடியேறிய நபர் ஒருவரை அங்கிருந்து வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி ஆனந்தபுரத்திலுள்ள தனது வீட்டை வேலுசெல்வராஜா என்பவர் பலாத்காரமாக உடைத்து அங்கு குடியேறியதாக சிவசம்பு சிவலிங்கம் என்பவர் கிளிநொச்சி பொலிசில் முறையிட்டதைத் தொடர்ந்து பொலிசார், கிளிநொச்சி நீதவான் திரு. வி. ஜெகசோதி முன்னிலையில் இவ் விவகாரத்தை தாக்கல் செய்தனர்.

வீட்டுச் சொந்தக்காரர் சார்பில் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன், சட்டத்தரணிகள்: த. ஸ்ரீபதி, ஏ, அருள்நாயகம், எஸ். கே. அழகராஜா ஆகியோருடன் ஆஜராகி வாதாடினர். அத்துமீறி குடியேறியவர் சார்பில் சட்டத்தரணி நி. மகாலிங்கத்தின் உதவியுடன் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆஜராகி வாதாடினர்.

சாட்சியங்களையடுத்து வீட்டுச் சொந்தக்காரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் தமது கட்சிக்காரர் வீட்டை இழந்து நிற்பதோடு தாம் செய்துவந்த வியாபாரத்தையும் தொடர முடியாது கஸ்டமுறுவதால் உடனடி நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென கோரினர்.

இறுதியில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி சாட்சியங்களை நம்புவதாலும், நீதி தாமதிக்கக் கூடாது என்பதாலும் சட்ட விரோதமாக வீட்டினுள் குடியேறியவரை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும், வீட்டுச் சொந்தக்காரரை வீட்டைப் பொறுப்பேற்குமாறும் உத்தரவிட்டார்.

## 45 ஆயிரம் ரூபா

## வேலைவாய்ப்பு மோசடி வழக்கில் எதிரி பிணையில் விடப்பட்டார்

(மாவிட்டபுரம்)

வேலைவாய்ப்பு மோசடி தொடர்பாக ஒருவர்மீது வழக்குத் தொடரப்பட்டதையடுத்து அவர் தாம் சுற்றவாளி எனக்கூறியதால் 30 ஆயிரம் ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் என்பவரிடம் கப்பலில் வேலைபெற்றுத் தருவதாகக்கூறி 10.5.81ல் 45 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்ற மட்டக்களப்பு அரசு பொறியியல் கூட்டுத்தாபனத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக உள்ள பொன்னம்பலம் வேலாயுதபிள்ளை என்பவர், வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காமல் ஏமாற்றியதுடன் பணத்தையும் மோசடி செய்ததாக யாழ். விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிசாரிடம் முறையிடப்பட்டதை யடுத்து மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் இவர்மீதான குற்றச்சாட்டுத் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து குற்றவாளியா சுற்றவாளியா எனக்கேட்கப்பட்டது. அவர் தாம் சுற்றவாளி எனக்கூறினர்.

மேற்படிநபர் பாலசுப்பிரமணியம் என்பவரிடம் கப்பலில் வேலை பெற்றுத் தருவதாகப் பணம் பெற்று வேறு ஒருவர் மூலமாக அவரைப் பம்பாய்க்கு அனுப்பிவைத்ததாகவும், பம்பாயில் இவரைக் கூட்டிச்சென்ற நபர் தலைமறைவானதாகவும், இதனையடுத்து பாலசுப்பிரமணியம் அங்கு அலைந்து திரிந்து பணமும் இல்லாத நிலையில் பெரிதும் கஷ்டப்பட்டு 3 மாதத்தின் பின்

(7ம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாண மக்கள் விரும்பி வாங்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள்

சன்யோ - **Sanyo** சிறு - **Sira** வர்ண - கலர் - வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள்

கொக்காவில்—சென்னை- அன்ரனு (ஏரியல்) அமைப்பு—பாடல்களைப் பதிவுசெய்வதற்கும்,

ரி. வி—றேடியோ—மணிக்கூடு திருத்துவதற்கும் நம்பிக்கையான ஸ்தாபனம்

# வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்

**266 | 1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.**

## வடமாகாண மக்களுக்கு புத்தாண்டுப் பரிசு!

# ரூபாய் 5000 க்கும் அதிக பெறுமதிமிக்க

## பரிசுகளை வென்றெடுங்கள்!!



National — நாஷனல்

SONY THE ONE AND ONLY — சொனி

வர்ண-கறுப்பு-வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகளை

எமது ஸ்தாபனத்தில்

மார்ச் 1-ம் திகதி முதல் ஏப்ரல் 15-ம் திகதிவரை

கொள்வனவு செய்யும் பற்றுச்சீட்டுக்குரிய அதிர்ஷ்டசாலிகளே

இப்பரிசுகளை வென்றெடுக்கும் வாய்ப்பினை அடைவர்.

- முதலாம் பரிசு: நாஷனல் (கறுப்பு வெள்ளை) தொலைக்காட்சிப் பெட்டி
- இரண்டாம் பரிசு: ஏஷியா சைக்கிள்
- மூன்றும் பரிசு: நாஷனல் றைஸ் குக்கர்

ஆகிய பெறுமதிமிக்க பரிசுகளை வென்றெடுக்க இன்றே விரையுங்கள் . . . .

உத்தரவாதத்திற்கும் அதிசிறந்த சேவைக்கும்

# சி. சின்னத்துரை அன் பிரதர்

39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 283 - 284.

தந்தி: "கல்கி"

யாழ்.றீகல்
தினசரி10—30, 2—00, 6—30, 9—30

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
எஸ் எஸ்.ஆர்-விஜயகுமாரி
சாரதா

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — பத்மினி
பேசும் தெய்வம்

சாந்தி யாழ்நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — சாவித்திரி
மாதர்குல மாணிக்கம்
—புதிய பிரதி—
கடைசித்தினம் 23.3.82


யாழ். கனகரத்தினம் ம. ம. வி.

# மெய்வல்லுநர் போட்டியில் பெரேரா இல்லம் சாம்பியன்


[அரியாலை]

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பெரேரா இல்லம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது. ஏனைய இல்லங்களான கனகரத்தினம் இல்லம், அருளம்பலம் இல்லம், சோமசுந்தரம் இல்லம் ஆகியவை முறையே இரண்டாம், மூன்றும், நான்காம் இடங்களைப் பெற்றன.

ஆண்கள்பிரிவுக்கான போட்டிகளில் 13 வயதுப்பிரிவில் ஏ. றெனஸ்ரன், ரி. சதீஸ்குமார் ஆகியோரும், 14 வயகுப் பிரிவில் என். உருத்திரா, எஸ். ஏ. நிக்ஸன் ஆகியோரும், 15 வயதுப்பிரிவில் எஸ். தயாபரனும், 16வயதுப்பிரிவில் எஸ். ஜெயசீலனும், 17வயதுப்பிரிவில் ஐ. ஏ. தவராசாவும் 18வயது பிரிவில் பி.குலேஸ்வரனும், ஆர். கருணுகரன் ஆகியோரும், 19 வயதுப் பிரிவில் கே. அமிர்தலிங்கம், எம்.சுகுமார், கே. சுரேந்திரகுமார் ஆகியோரும், 19 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் கே. எஸ். மோகனதாசும் சாம்பியன் வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பெண்களுக்கான போட்டிகளில் 13வயதுப் பிரிவில் ஆர். யசோதாவும், 14வயதுப் பிரிவில் ரி.றஜிரியும், 15வயதுப் பிரிவில் கே. யேபிசறியும், 16 வயதுப்பிரிவில் ஏ. சுகுணு, ரி. ஜெயந்தி ஆகியோரும். 16வயதுப்பிரிவில் எம். அமிர்தா, ரி. சைலஜா ஆகியோரும் 18 வயதுப் பிரிவில் எஸ். கௌரியும், 19வயதுப் பிரிவில் ஏ. வசந்தகுமாரியும், 19வயதுக்கு மேற்பட்ட பிரிவில் என்.காந்திமதியும், சாம்பியன் வீராங்கனைகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பழைய மாணவிகளுக்கான போட்டியில் சுகீத்திராவும, பழைய மாணவர் அஞ்சல்ஓட்டப்போட்டியில் விவாகமான வீரர்களும், அணிநடைப் போட்டியில் பெரேரா இல்லமும், இல்ல அலங்காரப் போட்டியில் அருளம்பலம் இல்லமும் வெற்றிக்கிண்ணங்களைச் சுவீகரித்துக்கொண்டன. [அ]



''கதக்களி பரத கலாமணி''

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை ரீதியில் நடைபெறும் நடனப்போட்டியில் வருடா வருடம் முதல் இடத்தைப்பெறுகின்ற யாழ். கலாக்ஷேத்திர சங்கீத நடன ஆசிரியர் கீதாஞ்சலி வி. கே. நல்லையாவின் பிரதம மாணவனும் நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றத்தனுதிகாரியும் பட்டப்படிப்புக் கல்லூரியின் சட்டமாணவனுமான செல்வன் க. ராதாகிருஷ்ணனின் நடனம் மறுவன்புலவில் அண்மையில் இடம் பெற்றது. நடன முடிவில் திரு. எம். பி. எஸ். எஸ். மணியம், செல்வன் ராதாகிருஷ்ணனுக்கு ''கதக்களி பரதகலாமணி'' எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.


வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
DRAGON PRINCESS

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30 6.30, 9.30
அம்மே மட்ட சமாவென்ன
(சிங்களம் — கலர்)

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:00, 4:30, 7.00 9.45
ROGER MOOR In
THE SPY WHO LOVED ME
JAMES BOND 007
(Passes and Concessions Suspended)
அதிபயங்கரக் காட்சிகள் நிறைந்தது

வெகு விரைவில்
ரஜனிகாந்த் நடித்த
பொல்லாதவன்


## வவுனியா வெற்றி

[வவுனியா]

அகில உலகப் பெண்கள் தினத்தினை முன்னிட்டு வவுனியா, பொலநறுவை, புத்தளம், அனுராதபுரம் மாவட்டங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வவுனியா மாவட்டம் வெற்றியீட்டியுள்ளது. அனுராதபுரம் ஸ்ரேடியத்தில் இப்போட்டி நடைபெற்றது. பாடசாலைகளுக்கிடையே நடந்த இப்போட்டியில் இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் இரண்டாம் இடம் பெற்றது. வெளியிடங்களுக்குச் சென்று போட்டிகளில் பங்குபற்றுவதற்கு திட்டமிடல் பணிப்பாளர் தரு. ஏ. தங்கராசா, அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன், வவுனியா மாவட்டப் பயிற்சி அதிகாரிகளான செல்விஜென். யசோதா திரு. ஏ. எஸ். குணரத்தினம் ஆகியோர் நடவடிக்கை எடுத்திருந்தனர். (கு)

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 10ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(23—3—82)

மேடம்: அன்னியரின் சகவாசகம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் நிகழலாம். எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியை குறைக்கும் தொழிலும் தடைகள் உண்டு.

இடபம்: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் வாகன சுகமும் உண்டு.

மிதுனம்: செய்தொழிலால் சிறப்புக்கிடைக்கும் வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு வெளியிடத்தில்இருந்து மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தியும் கிடைக்கும்.

கடகம்: நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும். நண்பர் ஒருவர் உமது காலை வாரிவிடுவதற்கு முயற்சி எடுக்கலாம். செலவினங்களை கட்டுப்படுத்திக் கொள்ளவும் இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

சிங்கம்; களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறலாம். நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாகும் காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புக்கள் இறுகும்.

கன்னி: முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தோன்றும் கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம். நண்பர்களாலும் நஷ்டமுண்டாவதற்கு இடமுண்டு.

துலாம்: தன்மான மிகுதிக்கும் தனவலுவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும் குடும்பத்தில் தென்றல்வீசும் உறவினர்கள் படைஎடுத்து வருவார்கள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்: இதமானவாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலாலும் சிறப்புண்டு மேலதிகாரிகளும் முன்வருவார்கள்.

தனு: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பலவழிகளாலும் முயற்சி செய்வீர்கள் புதிய தொழில்துறையொன்றில் வாய்ப்புக்கிடைக்கும் முன்னேற்றத்துக்குஇடமுண்டு

மகரம்: சிக்கல்கள் சிலந்திவலை பின்னும். தற்பெருமை மூலம் பணம் பாழாவதற்கு இடமுண்டு. விவசாயிகளாயின் அதிருப்தி உருவாகும். பூமிப்பிணக்குகள் தலைகாட்டாவண்ணம் தவிர்க்கவும்.

கும்பம்: அவசரப் புத்தியினுல் விபரீதங்கள் விளையலாம் கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும். அடக்கமாகஇருக்கவும்.

மீனம்: பெரிய இடத்து சினேகிதம் இன்று ஏற்படலாம் புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
ராஜா (யாழ்ப்பாணம்)
பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

2-வது ஜனத்திரள் மாதம்
50-வது நாளைத் தாண்டி 100-வது நாளை நோக்கி
வெற்றிகரமாகப் பறந்துகொண்டிருக்கின்றன
உல்லாசப் பறவைகள்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி
10.30, 2.30, 6.30, 9.30
சிவாஜி - ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ - பத்மினி
குலமா குணமா புதிய பிரதி

வின்ஸர் ஸ்தாபனத்தாரின் மகத்தான
புதுவருட வெளியீடு
26-03-82 வெள்ளி முதல்
சிவாஜி—எம்.ஜி.ஆர்.—கமல்—ரஜனி—நாகேஷ்
ஸ்ரீபிரியா—கே. ஆர். விஜயா
நடித்த
நட்சத்திரம்
(கலர்)


## வருடாந்த விளையாட்டுப் போட்டி

(வேலணை)

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வேலணை வங்களாவடியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்லூரி அதிபர் திரு. நா. கனகசபாபதி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விளையாட்டுப் போட்டியில் கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ, இரத்தினம் கலந்துகொள்கின்ருர். சிறப்பு விருந்தினராக பிரதம கல்வியதிகாரி ஜனுப் என். எம். மன்சூர் கலந்துகொள்கிருர். வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. நாகராசா கல்லூரிக்கொடியை ஏற்றிவைக்க, வேலணை வட்டாரக் கல்வியதிகாரி திரு: பொன். கணேசன் மங்கல விளக்கேற்றிவைக்க விளையாட்டுப்போட்டி ஆரம்பமாகும்.

## செய்முறை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். கல்வித்திணைக்கப்ள தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுச் சிறந்த முறையில் இயங்கிவருவது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் பயனுடையதாக இருக்குமென்பது எமது கருத்தாகும்.''

## மெய்கண்டான் வித்தியாலயம் இல்லப் போட்டி

(சுழிபுரம்)

பண்ணுகம் மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்த இல்லப்போட்டியில் வள்ளுவர் இல்லம் (பச்சை) 373 புள்ளிகளைப்பெற்று முதலாவது இடத்தைப் பெற்றது. நாவலர் இல்லம் (சிவப்பு) 317 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், பாரதி இல்லம் (நீலம்) 282 புள்ளிகளை பெற்று மூன்ருவது இடத்தையும்பெற்றது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முன்னுள் இளைப்பாறிய அதிபர் திரு. செ. ஸ்ரீனிவாசன் பரிசில்களை வழங்கினுர்.

## விற்பனைத் திணைக்களம் வெற்றி

[அரியாலை]

விற்பனை அபிவிருத்தித் திணைக்களக் கோஷ்டிக்கும் மக்கள் வங்கிக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ மென்பந்தாட்டப் போட்டியில் விற்பனை அபிவிருத்தித்திணைக்களக் கோஷ்டி 26 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. விற்பனை அபிவிருத்தித் திணைக்களக் கோஷ்டிக்கு திரு. எஸ். சிறிலும், மக்கள் வங்கிக் கோஷ்டிக்கு திரு. எஸ். பாலசுந்தரமும் தலைமைவகித்தனர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஊர்காவற்றுறைத் தொகுதியில் சரவணை என்னுமிடத்தில் புளியங்கூடல் சந்திக்கு அருகாமையில் 'ஈணியக்கை' என்னும் முப்பது பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்க: ஈழத்துச் சிவானந்தன், புங்குடுதீவு. 2622

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில், 2½ பரப்புக்காண, மூன்று அறைகளைக்கொண்ட புதியகல்வீடுவிற்பனைக்குண்டு. காணிக்குத் தனியான பாதையுண்டு. விபரங்கட்கு: சி. சுப்பிரமணியம், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. 2624

யாழ்ப்பாணம், புங்கன்குளம் வீதியில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: கணேசன் [J.P.], 25, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 260 [2606]

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இ. கமலநாதன், சட்டத்தரணி, ஆடிய பாதவீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 2617

## ஆங்கில கல்வி

நவீன் உலகத்தினுட் பிரவேசிக்க ஒரே ஒரு திறவுகோல் ஆங்கில அறிவேயாகும். இதை எல்லோருக்கும் உகந்த இலகுவானமுறையில் உச்சரிப்புகளுடனும் மொழிபெயர்ப்புகளுனும் கற்பிக்கின்ற ஒரே ஒரு தமிழ் வார இதழ் 'விளக்கமான ஆங்கிலம்' எங்கும் கிடைக்கும். விலை 2/25. ஆங்கிலம் பிரசுரிப்பாளர்கள், த. பெ. 23, கண்டி. 2520

## தவறிவிட்டது

ஹொண்டா மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு ஒன்று [Number Plate] பலாலி றோட்டில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து 37, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2623

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நல்லசுற்றுடலில் சகல வசதிகளும் கொண்ட மாத வாடகை ரூபா 800/ க்கு மேற்படாத வீடு தேவை. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: த. த. துரைராஜா, சட்டத்தரணியும் நொத்தாரிசும்' 84, லொறிஸ் வீதி, கொழும்பு - 4. போன்: 82878, 587976. (2621)

## வேலைவாய்ப்பு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவாறு இலங்கை திரும்பியதாகவும் வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜெ. செல்வரத்தினம் நீதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் வழக்கை விசாரணைக்காக ஜூலை 19ம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் சந்தேக நபரையும் 30 ஆயிரம் ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்தார், சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீதரன் ஆஜரானர். (அ)

# சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் வல்லையில் பாரிய நன்னீர்த்திட்டம்!

## உடுப்பிட்டி எம். பி. தகவல்

(கரவெட்டி)

''வல்லையில் பாரியநன்னீர்த் திட்டமொன்றை உருவாக்குவதன் மூலம் யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து தொகுதிகளை வளம் கொழிக்கும் பிரதேசமாக மாற்றியமைக்கமுடியும்''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் கீழ் கரவை கவுந்தில் இளம் விவசாயிகள் கழகத்தின் 22வது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கவுந்தில் சனசமூக நிலைய அரங்கில் நடைபெற்ற இவ் விழாவிற்கு ஆசிரியர் திரு. வே. லீலாரட்ணம் தலைமை வகித்தார். உடுப்பிட்டி எம். பி. திரு இராசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

### அபிவிருத்தி வேலைகள்

''கடந்த நாலரை ஆண்டுகளில் கரவெட்டி கிழக்கில் கண்ணியமான முறையில் பலதரப்பட்ட அபிவிருத்தி வேலைகளைச் செய்துள்ளேன். இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திலும் இப்பகுதி மின்சாரஅபிவிருத்தி வேலைகளுக்கு ஏனையபகுதிகளை விட அதிகமான பணத்தை ஒதுக்கிக் கொடுத்துள்ளேன். இம்முறை மேற்கொள்ளப்படும் மின்சார அபிவிருத்தி வேலைகளுடன் கரவெட்டி கிழக்கு மின்சாரத்தில் தன்னிறைவு காணுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

''கரவெட்டி அத்துளுத் தண்ணீர்த்திட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கம் எனக்குஇருக்கிறது. ஆனல் இத்தண்ணீர்த் திட்டத்தை விஸ்தரிப்புச் செய்வதற்கு அத்துளுக்குளம் ஆழமாக்கப்படவேண்டும் இதனல் ஏற்படும்விளைவுகளை, ஆபத்தை உணரும்போது இப்பகுதிமக்களை அது எந்த அளவிற்குப் பாதிக்குமென்பதை சிந்திக்க வேண்டியாகவுள்ளது.

''அமெரிக்காவின் பலகோடி ரூபா செலவில் மணற்காட்டில் ஆரம்பிக்கப்படும் தண்ணீர்த் திட்டம் எமக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இத்திட்டத்துடன் அத்துளுத் தண்ணீர்த் திட்டத்தையும் இணைத்தால் கரவெட்டி மக்களின் குடிநீர்ப் பிரச்னை தீர்க்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கைஎனக்குண்டு.

### அமெரிக்க உதவியுடன்

''அமெரிக்காவிலுள்ள ரெனிஸ் வலித்திட்டம்4 ஆண்டுகளுக்கு முன்னர்ஆரம்பிக்கப்பட்ட ஒருதிட்டமாகும். இதன் அடிப்படையிலேயே தென்னிலங்கையில் பசுமைப்புரட்சியைஏற்படுத்தும் நோக்கமாக மகாவலித்திட்டமும் உருவாக்கப்பட்டது.

''அமெரிக்காவில் ஒரு ரெனிஸ் வலித்திட்டத்தின் உதவி இருக்குமானல், தென்னிலங்கைக்கு மகாவலித்திட்டத்தின் உதவி கிடைக்குமேயானல் வடபகுதி மக்களுக்கென ஒரு வல்லை நன்னீர்த் திட்டத்தின் உதவி ஏன் கிடைக்கக்கூடாது.

''வல்லை நன்னீர்த் திட்டம் உருவாக்கப்படுமேயானல்உடுப்பிட்டி, கோப்பாய். பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய தொகுதிகளிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்காகப் பயன்படுத்துவதுடன் வடபகுதியை பொருளாதார அபிவிருத்தியில் மேம்படச் செய்யலாம்.

### அமெரிக்க அதிகாரிகளிடம் கோரினேன்

''அண்மையில் நான் வெளிநாடு சென்றபோது அமெரிக்காவிலுள்ள ரெனிஸ வலி அபிவிருத்தி சபை நிர்வாகிகளோடு அதன் தொழிற்பாடு பற்றி நேரடியாகக் கலந்துரையாடினேன். அங்கே உலக வங்கியின் தலைமைச் செயலகத்தின் பொறுப்பாளரிடம் வல்லை நன்னீர்த்திட்டம் பற்றிய எனது உள்ளக் கிடக்கையை வெளியிட்டு இலங்கையில் மகாவலி திட்டம் போக்குவரத்துச்சபை போன்றவற்றிற்குஉதவி வழங்கும்போது அவ்வாறே ஓர் இனத்தின் மூலதாரப் பிரச்னையாக விளங்கும் வாழ்க்கைக்கு இன்றியமையாத வல்லை நன்னீர்த்திட்டத்திற்கு உதவுவதற்கு உலக வங்கி ஏன் முன்வரக்கூடாது? என்ற கேள்வியை அவரிடம் நான் முன் வைத்தேன்.

அந்தப் பேச்சு வார்த்தையின் பலனக இன்று இந்த நாட்டில் நிர்வாகம் பரவலாக்கப்பட்டு மாவட்ட சபையின் கீழ் இதுபோன்ற உலக நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று விவசாயம் மட்டுமல்லாமல் கைத்தொழில், கப்பல் சேவை போன்ற அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு'' என்று கூறினர்.

இவ்விழாவில் யாழ் மாவட்ட விவசாய உத்தியோகத்தர் திரு, அன்ட்ரூ யோசப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. மு, தம்பிமுத்து, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை, கரவெட்டி கிழக்கு கிராமோதய சபைத்தலைவர் திரு. மு. வேலுப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினர்கள். விழா ஆரம்பமாவதற்கு முன்னர் உடுப்பிட்டி எம். பி. யாழ். மாவட்ட விவசாய உத்தியோகத்தர் அபிவிருத்திச் சபை உறுப்பினர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் கரவெட்டி கிழக்கு புளியடிச் சந்தியில் இருந்து மேளதாள வாத்திய இசையுடன் ஊர்வலமாக விழா மைதானம் வரை அழைத்துவரப்பட்டனர்.

க. சி. முத்துக்குமாரசாமி,
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

பின்முற்றுக்கும் தீர்வையின் அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனம் முடியாமல் காலம்சென்ற விஜயநாதன் ராதாகிருஷ்ணனின்சொத்துக்களின் விடயமாக:—

விஜயநாதன் ராதாகிருஷ்ணன், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

—காலஞ்சென்றவர்

அகஸ்ரீன் மைக்கேல் விஜயநாதன், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

—மனுதார்

நியாயாதிக்கம்
இல. 1137/TY

எதிராக

அகஸ்ரீன் மைக்கேல் விஜயநாதன் பெண் இராசம்மா பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

—எதிர்மனுதார்

மேலே சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதன ஒப்பேற்றல் சம்பந்தமான மேலே குறிக்கப்பட்ட இலக்கம் தத்துவ வழக்கு இம்மன்றில் தாக்கல்செய்யப்பட்டு 24.2.82 ல் பின்முற்றுக்கும் தீர்வை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் சகலருமறிவீராக:—

எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்த நீதிமன்றில் 1982 ம் ஆண்டு ஆனி மாதம் 25 ந் திகதி மு. ப. 9 மணியளவில் இம்மன்றில் சமுகம் கொடுத்து பின்முற்றுக்கும் தீர்வை முழுத்தீர்வையாக ஏன் பதியக்கூடாது என்பதற்கு ஏதேனும் காரணம் இருப்பின் அவைகளைக் காட்டுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1982 ம் ஆண்டு மாசி மாதம் 24 ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

பதிவாளர்

23.3.82 2595

## வாலிபர் தற்கொலை

(மாவிட்டபுரம்)

தமக்கு ஏற்பட்ட சூழ்நிலைகளால் மனம் நொந்த மாணவன் ஒருவர் நஞ்சருந்தி மரணமானர்.

கல்லூரி ஒன்றில் க. பொ. த. [உயர்தர] வகுப்பில் பயின்று வந்த வீமன்காமத்தைச் சேர்ந்த கனகராஜா சுரேஸ் [21 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இம்மரணம்குறித்துத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் காலமானவரின் தந்தை கந்தையா கனகராஜா சாட்சியமளித்தார்.

''சம்பவதினம் பகல் 10—30 மணியளவில் காலமானவர் வீட்டுக்கு வந்தபோது ஏன் இந்த நேரத்தில் கல்லூரியிலிருந்து வந்தாய் எனக்கேட்டேன். கல்லூரியில் மாணவர் தலைவராக இருந்த தமக்கும் மற்றொரு மாணவர் தலைவருக்குமிடையில் சிறு பிரச்னை ஏற்பட்டதையடுத்து மனமுடைந்துள்ளதாகவும் இதன் காரணமாக ஏற்பட்ட மனவேதனையால் நஞ்சருந்தி விட்டேன் எனவும் காலமானவர் கூறினர்'' என்று தந்தை தமது சாட்சியத்தில் கூறினர். சிகிச்சையளித்த வைத்திய அதிகாரியும் சாட்சியமளித்தார். தற்கொலை என தீர்ப்பு அளிக்கப்பட்டது. காங்கேசன்துறை பொலிசைச் சேர்ந்த இ. மச்சேந்திரன் சாட்சிகளை ஆஜர் செய்தார். [அ]

புலோப்பளைக் கொலைவழக்கு:

## 'வில்லுக்கத்தியை கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்' பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(சாவகச்சேரி)

''இந்த வழக்கின் விசாரணை குழுவுக்கு நான் தான்தலைமை தாங்கினேன். இந்த வழக்கில் 8 சான்றுப் பொருட்கள் நீதிமன்றத்திற் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சம்பவத்தில் பாவிக்கப்பட்டதாக கூறப்படும் வில்லுக்கத்தியை அரியம் என்பவரின் வாய் முறைப்பாட்டை தொடர்ந்து கைப்பற்றினேன். பிறகு இதைப் புத்தகத்திற்றிற் பதிவு செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்''.

புலோப்பளை கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் முன்னைநாள் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. ஜி. விஜயசூரியா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பளையைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை என்பவர்கள் கோயில் பூஜகர் சாம்ப சிவ சர்மா குகபால சர்மா என்பவரைக் குத்திக் கொலை செய்ததாக பளைச் சுற்று நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

முறைபாட்டுக்காரர் சார்பில் சார்ஜன்ட் வி. செல்யாவுடன் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயவும் ஆஜராகினர்.

பளை சுற்று நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடந்த விசாரணையில் விஜய சூரியா தொடர்ந்து குறிப்பிட்டதாவது: 1ம் எதிரி இருப்பது பளையில், 2ம் எதிரி இருப்பது கிளாலியில் இவர்களைத் தேடி வலை விரித்து கொண்டு சென்றேம். என்னேடு பொலிஸ் உத்தியோகத்தர் வீரசிங்கம், பண்டார சூரியப்பிரகாசம் என்பவர்கள் வந்தார்கள். நாங்கள் 1ம்எதிரி வீட்டுக்கு போனேம். அங்கு அவர் இல்லை. பின்னர் கிளாலியில் பொர்ணுந்து என்பவர் வீட்டில் வைத்து இவர்களைக் கைது செய்தோம். மறுநாள் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஸ்ரீ சிவாய சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்டத்தரணி; உமது அறிக்கையில் இரத்தக் கறை பற்றி குறித்தீரா: இல்லை.

சட்: கடைக்குள் பெற்ரேல் மாக்ஸ் இருந்ததைப் பற்றி குறித்தீரா? — இல்லை,

சட்: சான்றுப் பொருட்களைப் பற்றிய வரைபடம் வரைந்தீரா? இல்லை.

சட்: எதிரிகளைநீர் எப்போ தேடச் சென்றீர்? — சம்பவ தினத்திற்கடுத்தநாள்.

சட்; 1ம் எதிரிரிக்கு வேறு பொர் உண்டா? — துரை அல்லது பஸ்தியாம்பிள்ளை என்றழைக்கப்படுவார்.

சட்; இந்த எதிரிகள் சட்டத்தரணி மூலம் சரணடைந்தார்கள்? — இல்லை. நாங்கள் கைது செய்தோம்.

சட்: எங்கே கைது செய்தீர்? — கிளாலியில்.

சட்: எத்தனையாம் திகதி கைதுசெய்தீர்? — 30.06 80ல்

சட்: நீங்கள் போனது ஜீப் வண்டியில்? — இல்லை வாடகைக் காரில்.

சட்: சான்றுப் பொருட்களில் ஒன்ருகிய வில்லுக்கத்தியை எங்கே எடுத்தீர்? இரண்டு சந்தேக நபர்களின் சாட்சியங்களை பதிவு செய்தபின் குறிப்பாக 2ம் எதிரியின் வாக்கு மூலத்தைக்கொண்டு அதைக் கைப்பற்றினேன்.

சட், சென்ற முறை சாட்சியமளிக்கும்போது 1ம் எதிரியை அந்தோனிப்பிள்ளை அல்லது அரியம் என்று கூறினீரா? ஞாபகமில்லை.

சட்: உமது குறிப்பேட்டில் பதி பதிந்திருந்தால் ஞாபகமிருக்கும்? பதில் இல்லை.

சட்: 1ம் எதிரி அரியம் எனக்குறித்திருக்கிறீரா? பதில் இல்லை.

சட்: இப்பொழுது 2ம் எதிரியைக் காட்டுகிறீர் எது சரி? பதில் இல்லை,

சட்; இந்த மரண விசாரணைக்கு நீர் தான் பொறுப்பு? ஆம் நானே பொறுப்பு.

நீதிபதி ஏப்ரல் மாதம் 6ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (க)

## முழுமை....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நிரூபித்துள்ளது.

ராய்ட்டர் செய்தி நிறுவனத்தின் ஒரு தகவல்; திருகோணமலையில் அமெரிக்க கம்பனிகள் பெரும் எண்ணைக் குதங்களைக்கட்டி வருகின்றன. ஆயினும் இங்கு ராணுவத் தளம் அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது என்று இலங்கை அரசாங்கம் அறிவித்து விட்டது என்று தெரிவிக்கிறது.

# உள்ளூர் உற்பத்திப் பெருக்கத்தை நாசமாக்கியது ஐ.தே.க. அரசுதான்!

## கூட்டுறவுச் சங்க விழாவில் 'சிவா' குற்றச்சாட்டு

(கரவெட்டி)

இந்த நாட்டில், உள்ளூர் உற்பத்திப் பெருக்கத்தை நாசமாக்கியது ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமே. உள்ளூர் உற்பத்தியையே நம்பி வாழும் காலம் அதிக தூரத்திலில்லை''

இவ்வாறு, தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் கட்டைவேலி - உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு சங்கத் தலைவர் செ. திரு.தங்கராசா தலைமைவகித்தார். நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''அமரர் என். எம். பெரேராவினுல் தெங்கு — பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும்முறை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது எம்மில் பலர் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாக இருக்கவில்லை. எனினும் இப்புதிய முறையினுல் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுமோ என்ற அச்சம் அப்போது ஏற்பட்டு இருந்தது. ஆனுல் இந்த முறையினுல் நாட்டின் பல இடங்களிலும் முன்னேற்றமான பல நல்ல மாற்றங்கள் உருவாகியிருப்பதையிட்டு நாம் அதை இன்று வரவேற்கின்ருேம். அதேவேளையில் சகல துறைகளிலும் முன்னுேடியாக விளங்கும் வடபராட்சி இப்புதியமுறையினுல் கடந்த சில வருடங்களாக பின்தங்கியிருந்ததையிட்டு வேதனையடையாமல் இருக்கமுடியாது. வடமராட்சிப்பகுதியிலுள்ள தெங்கு —பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சியடைய முடியாமல் இருந்ததையிட்டு உடுப்பிட்டி எம். பி. தம்பி இராசலிங்கம் தனது வேதனையைக்கூடத் தெரிவித்திருந்தார். இந்தச் சங்கங்களை முன்னேற்றவேண்டும் என்ற அவா அவர் சிந்தனையில் தோன்றிய தன் பலனுகவே இன்று 10வது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடும் நிலை ஏற்பட்டது. இதற்காக தம்பி இராசலிங்கத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

''ஐக்கிய தேசியக்கட்சி அரசாகத்தில்தான் உள்ளூர் உற்பத்தி நாசமானது. இந்த அரசாங்கம்தா ;ாளஇறக்குமதியை ஒரு பொருளாதாரக் கொள்கையா கடைப்பிடித்து வருகிறது. இந்த அரசாங்கம் பதவி ஏற்ற காலம் முதல் சீனி இறக்குமதியை ஒரு தட்டுப்பாடான நிலையில் வைத்திருந்திருக்குமானுல் இன்று இந்த நாட்டில் சீனி உற்பத்தி அதிகரித்திருக்கும். இன்ருே சீனி இறக்குமதி தனியார் துறையினரிடம்ஒப்படைக்கப்பட்டுசீனி இறக்குமதி செய்வதை அரசாங்கம் கைவிட்டுவிட்டதுடன் தனியாரிடம் சீனி இறக்குமதி விடப்பட்டதால் சீனியின் விலை குறைந்துவிட்டது என்றும் கூறப்பட்டது. ஆனுல் இன்று சீனிக்கு என்ன நடந்தது என்பதைப் பார்க்கும்போது, தனியார் துறையினரே சீனியின் விலையைக் கூட்டிக் கொண்டு போவதையும் அதை அரசாங்கம் கட்டுப்படுத்தமுடியாமல் இருப்பதையும் உணரக் கூடியதாகவுள்ளது என்ருர்.

உடுப்பிட்டி எம்.பி.திரு.த. இராசலிங்கம் பேசுகையில் கூறியதாவது: வடபகுதியில் 80 லட்சம் பனைமரங்கள் இருந்தபோதிலும் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படாமலேயே இருந்து வருகின்றன. தென்னிலங்கையில் றப்பர், தெங்குப் பொருட்கள் போன்றவற்றிற்கு அபிவிருத்திச் [சபைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே பனம் பொருளுக்கும் அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டிருக்குமானுல் இன்று வடபகுதி பொருளாதாரத்தில் நினைக்க முடியாத பாரிய மாற்றத்தைக் கண்டிருக்கும்.

''திக்கத்தில் பத்துலட்சம் ரூபா செலவில் சாராய வடிசாலை ஒன்று அமையவுள்ளது. இந்த வடிசாலை 83ம் ஆண்டிலிருந்து இயங்கும். இதனுல் சீவல் தொழிலாளர்களின் பிரனைகள் தீர வழிபிறக்கும்'' என்ருர்.

யாழ். கூட்டுறவுஆக்க உதவி ஆணையாளர் திரு. ச.வேலாயுதபிள்ளை உட்பட பலர் இவ்விழாவில் உரையாற்றினர்கள்.

## சீன குற்றச்சாட்டு

மாஸ்கோ. மார்ச். 22

சோவியத் யூனியன் உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதென்று சீன தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சோவியத் யூனியன் தலையிட்டதுபோல் ஏனைய நாடுகளின் விவகாரங்களிலும் அது தலையிடலாமென சீன அறிவித்துள்ளது. [வெ]

# நாடு பூராவும் பரவலாக பலத்த மழை

[கொழும்பு]

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த இரண்டு நாட்களாக பரவலாக மழைபெய்து வருகிறது.

கொழும்பில் நேற்று 155 மில்லிமீட்டர் மழையும், கட்டுநாயக்காவில் 117 மில்லிமீட்டர் மழையும். அனுராதபுரத்தில் 65 மில்லியீட்டரும், நுவரெலியாவில் 61 மில்லி மீட்டர் மழையும் பெய்துள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வவனியா, அம்பாந்தோட்டை மன்னுர் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் நேற்று சுமாரான மழை பெய்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்றுப்பெய்த மழையினுல் காசல்றி, மவுசாகலை நீர்த்தேக்கங்களில் முறையே 4 அங்குலம், 3 அங்குலம் அளவில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக இலங்கை மின்சாரசபை அறிவித்தது.

அதே வேளை மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்கும்படி இலங்கை மின்சாரசபை பொதுமக்களைக் கேட்டுள்ளது. (வெ)

### கூடுதலான...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளார். வாக்காளரின் ஆதரவுசங்கத்தின்மீதும் கடன் வழங்கு சபை மீதும் கொண்டுள்ள நம்பிக்கையையே தெளிவுபடுத்துகிறது'' என்றும் திரு. ந சிவபாதம் தெரிவித்துள்ளார்.

### சுயேச்சை வேட்பாளர் நன்றி கூறுகிருர்

''யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள கடன் வழங்கு சபைத் தேர்தல்திருப்திகரமாக நடைபெற்றிருக்கிறது'' என்று சுயேச்சை வேட்பாளர் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள கடன் வழங்கு சபைத் தேர்தல் முடிவுகள் நேற்றுக் காலை வெளியானதைத் தொடர்ந்து திரு.பொ. ஸ்ரீஸ்கந்தராஜா தனது ஆதரவாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில்; இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேட்பாளர்கள் அனைவரும் வெற்றிபெற்றுள்ள அதே நேரத்தில், சுயேச்சையாகப் போட்டியிட்ட தமக்கு எதிர்பார்த்தற்கும் கூடுதலான வாக்குகள் கிடைத்திருக்கின்றன என்றும், இந்த வாக்குகளின் மூலம் அவர்கள் தங்களது அதிருப்தியைக் கடன் வழங்குசபை மீதுகடுமையாகக் காட்டியுள்ளனர் என்றும், தமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கூறினுர்.

மேற்படி தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட நான்குபேரில் திரு. பொ.ஸ்ரீஸ்கந்தராஜா சுயேச்சையாளர்களில் ஆகக்கூடுதலான (325) வாக்குகள் பெற்றுள்ளார்.

### சட்டம்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் யாழ் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு, கே சிவஞானம், யாழ் மேயர் திரு. இராஜா விசுவநாதன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ் நகரின் குறிப்பிட்ட ஒருபகுதியில் நிகழ்ந்த மேற்படி அசம்பாவித சம்பவங்கள் யாழ் நகரில் பரவாதவண்ணம் உடனடி நடவடிக்கை மேற்கொண்டதற்காக வட பிராந்திய பொலிஸ்மா அதிபருக்கும் யாழ். அரசாங்க அதிபருக்கும் யாழ் மாநகர சபை ஆணையாளருக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு குறிப்பிட்ட பகுதிகளில் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழாவிட்டால், ஏற்கனவே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள முப்பத்துஎட்டுப் பேரையும் இன்று பிணையில் அனுமதிப்பது பற்றி ஆலோசிக்கப்படும் என்று வடபிராந்திய பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு, அ. நவரத்தினம் உறுதி தெரிவித்தார்.

பொலிஸார் ரோந்து நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும் என்றும் சட்டம், ஒழுங்கை, மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜாதெரிவித்தார்

நேற்று நடைபெற்ற சமரச மகாநாட்டில் கலந்துகொண்ட இருசாராரும் அமைதிநிலவ சகல நடவடிக்கைகளும் மேற்கொள்வதென்று ஒருமனதாக முடிவுசெய்துகொண்டனர்.

கடைகளை இன்று வழமை போல் திறப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### தனிமாவட்ட....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பீடம் ஒரு விசாரணைக் குழுவினை அனுப்பி வைத்ததினுல், கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி, கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டங்களுக்கும் பாராளுமன்றக் குழுக்கூட்டங்களுக்கும் செல்லக்கூடாது என்று முன்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் வாபஸ் பெறப்பட்டது.

## மன்னுரில் கடும் வரட்சி:

# உணவுமுத்திரை-நிவாரணப் பணம் வழங்க நடவடிக்கை

[மன்னுர்]

மன்னுரில் இம்மாதம்வரட்சி நிவாரணப் பணமும் உணவு முத்திரையும் வழங்கப்படும் என்று மன்னுர் கச்சேரியில் மன்னுர் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

மாந்தை. முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் மன்னுர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பரப்பாங்கண்டல் பெரியநாவல்குளம், கள்ளிக்கட்டைகாடு ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும், நானுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 14 கிராமங்களிலும் வரட்சி நிவாரணம் வழங்கப்படும்.

வரட்சிநிவாரணமாக 7பேர் கொண்ட குடும்பத்திற்கு 140 ரூபாயும் 10 பேர் கொண்ட குடும்பத்திற்கு 190 ரூபாவும், 11 பேர் கொண்ட குடும்பத்திற்கு 230 ரூபாவும் மாதாமாதம் வழங்கப்படும்.

# 3-வது கிரிக்கெட் டெஸ்ட்:

# இலங்கை: 6 - 204

லாகூர். மார்ச், 22

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கிரிக்கட் கோஷ்டிக்கு மிடையில் நடைபெற்ற மூன்ருவது கிரிக்கட் டெஸ்டின் முதல்நாள் ஆட்டம் இன்று லாகூரில் ஆரம்பமான போது முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் 6 விக்கட்டுகளை இழந்து 204 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ருேய்டயஸ் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்களை எடுத்தமை குறிப்பிடத் தக்கது,

ஆட்டம் இன்று காலை தொடர்ந்து நடைபெறும். (வெ)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் அம்பலவாணர்

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த மாணிக்கம் அம்பலவாணர் காலமாகிவிட்டார். [முன்னுள் பிரபல யாழ். மார்க்கட் வர்த்தகர்] இவர் திருவார்த்தைப் பிள்ளையின் அன்புக் கணவரும், சிவசாமி (தொழில் நுட்ப உதவியாளர், நீர்ப்பாசன இலாகா, வவனிக்குளம்), குணபாலசிங்கம் (பொறியியலாளர், நீர்வழங்கல் வடிகால் அமைப்புத்திட்டம், கல்கிசை), சண்முகராஜா, [உரிமையாளர், ஸ்ரீமகள் றேடர்ஸ், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத்தந்தையும் ரதிதேவி, தனபாக்கியம் ஆகியோரின் அன்பு மாமனுரும், பிரமிளா, தர்மிளா, சர்மிளா, விஜயசங்கர் ஆகியோரின் பேரனுமாவார். அன்னுரின் ஈமைக்கிரியை இன்று [23 3 82] செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கேரதீவு மயானத்தில் நடைபெறும்.

2628

## மரணஅறிவித்தல்

### திருமதி உமாதேவியம்மா மகாகணபதிக் குருக்கள்

பருத்தித்துறை, வியாபாரிமூலை சித்திவிநாயகர் ஆலயப் பிரதமகுருக்கள் ஸ்ரீலஸ்ரீ மகாகணபதிக் குருக்கள் அவர்களின் பாரியார் உமாதேவிஅம்மா அவர்கள் 22—3—82ல் இறைவனடி சேர்ந்தார். இறுதிக கிரியைகள் இன்று [23—3—82] பிற்பகல் 3மணியளவில் பருத்தித்துறை மயானத்தில் நடைபெறும். உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிருேம்.

ம. சுப்பிரமணியக் குருக்களும்,
சகோதரர்களும்.

2630

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 23-ந் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி 77 07, 329, 8155.